உ

சிவமயம்.

திருவேரகம்,

திருப்பழனி

வடிவேலர்பேரில் பதிகம்.

இவை.

வீ. இராஜூமுதலியாரவர்கள்ால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

திருவேரகம்.

திருப்பழனி

வடிவேலர்பேரில்பதிகம்.

ஆதிபரமானசுய சோதியே யீசர்க்கரும்பொருளுரைத்த குருவே, ஐயனேயுன்னையுஞ் செய்யவேல்மயில்வள்ளி யம்மைதெய்வானை தனையும், நீதமுட னனுதினமு மோதவேயெந்தனது நெஞ்சினிற்குடி கொள்ளுவாய், நிமலனருள் பாலனே குமரகுருவேலனே நினைப்பவர்க்கனுகூலனே, தோதறப்பாரிலுள வேதசாஸ்திரமெலாங் குருமுளித்தனக்குரைத்தாய், குவலயத்துணதுதன்பர் கவலையைப்போக்கிடக் குருவாகி வந்தவர்க்கே தீதிலாமெஞ்ஞான போதமதையவர்களது சிந்தையுட் டெளியவைப்பாய், செங்கண்மால்மருகனே துங்கவேல்முருகனே தென்பழனிவடிவேலனே.

ஆடியதோர்பப்பரம் தோடிவீழ்வதுபோ லென்றுக்கை கெட்டழியுமுன்னுன், னழியாததிருவடி யெ

ன்விழியினர் காண்பதற் கருள் தருக வேண்டுமையா, கூடுவிட்டாவிபின்னேடிய தொடுங்கையிற் குறிப்புடன்காண்பதரிதே, கூறுவாயிவ்வுலகில் சாருவாய்மீனெனக் குலைகள் தடுமாறுதையோ, மாடுதனம்வீடெனத் தேடுவதிலென்னமனே மக்கள் தாய்தந்தையுடனே, மகராஜனுகவிச் செகமாண்டிருந்தென்ன வடிவேலாயுனதடிதினம், தேடிமெஞ்ஞானமதைநாடும் வகையருளுவாய் திருவாயினிற்றுயின்ற, செங்கண்மால் மருகனே துங்கவேல்முருகனே தென்பழனி வடிவேலனே. 2

அல்லுபகனின் றுதிப்பில்லா திருக்கின்ற வறியிவிலேனுகிலுமென், னப்பனேயெனதுடைய சொப்பனத்துன்வாக்களித்தும் பொய்யதாமோ, வில்லையோவன்பரிடம் வல்லையோகற்கிரரிடர் தவிர்த்தாளவில்லையோ எளியனிடர் தீர்க்கப்பழி யுனக்கல்லவோ பெவர்வருவருன்னை யல்லால், கல்லையோயான்றுதிகள் சொல்லினேனனுதினங் கபடுவையாதுநெஞ்சிற், கருதுகருதமடியார் கடமதிருவினை தவிர்த்துகற் காக்ஷிதந்தாளுதற்கே, செல்லுமேயுக்தனுல் வல்லபமதில்லையோ திருவாக்கெனக்கருளுவாய் செங்கண்மால்மருகனே துங்கவேல் முருகனேதென்பழனி வடிவேலனே. 3

ஆடியேயனுதினம் பாடித்துதிக்கவொரு வணு
வேணும்யானறிகிலே, னறமாகிலும்செயப் பொரு
ளேதுமில்லையிந்த வவனியிலுடம்பெடுத்தேன், னீடி
யெந்நாளுமிக்கூடழிவிலாதிந்த நீணிலத்தெவர்வாழ்ந்
தனர், நில்லாதகாயமது சொல்லாத கன்றுவிடும்நீரி
ன்மேற்குமிழியதனால், நாடினனுன் சரண்தேடிப்பிடி
ங்கமெய் ஞானமதெனக்கருளுவாய், நட்டாறுதன்னி
லேவிட்டிடாதே கொடிய நமனும்வந்தெந்தனைத்தா
ன், தேடிப்பிடித்திடவு மோடிவருமுன்னிலுன் திரும
யிலின்மீதுவருவாய்,செங்கண்மால்மருகனே துங்கவே
ல் முருகனே தென்பழனி வடிவேலனே. 4

ஆசையதுகொண்டுலக பாசக்கடற்குளோழுந்தி
யிப்பாரிலேயா, னரவின்வாய்த்தேரைபோற்சிறுமை
யோடிருப்பதனையறியாதிருப்பதெதினால், நேசமுட
னல்விசுவாசமதுசற்றிலாநிர்மூடனெனினுமிந்த, நீணி
லத்துணையலால் வீணிலொருதெய்வத்தை நெஞ்சந்த
னிற்றுதிக்கேன், மாசென்னசெய்தன்யான் பேச்சினை
வர்பேசாமல்மௌனத்திருப்பதென்னே, வன்னமோ
கீற்குறிதுதன்னமோகிள்ளைமொழி வள்ளிசொல்மாய்
கைதானே, தேசங்கள்புகழுமுருகேசனேமுகிலொத்
ததிருமயிலின்மீதுவருவாய், செங்கண்மால்மருகனே
துங்கவேல்முருகனே தென்பழனிவடிவேலனே. 5

வல்லனேயான்சிறியபுல்லினிற்கிணையாமோ வடிவேல்வடியனேற்கு,மாறுதகினதருள்தாராதிருக்கின்ற மனச்சலிப்பேதையனே, கல்லேநிகர்மூடனுன் சொல்லுவதுன் னீராறு காதினிற்கேட்க விலேயோ, கடினமோயென்றும்நின்னடிமை நானல்லவோ கலங்குதேயெனதுநெஞ்சம், வில்லறிவி னேற்குனது சொல்லாலுணர்ந்திடு மெப்போதமதெனக்கருளுவாய், புத்திசற்றில்லாத பத்தியோரென்போலவர் பூவுலகிவியாருமுளரோ, தில்லேதனில்மேவிவளர்வல்லிசிவகாமிமகிழ்சிவகுருவதானபரனே, செங்கண்மால்மருகனே துங்கவேல்முருகனே தென்பழனிவடிவேலனே. 6

தரணிதனே யாண்டகுருபரனே நின்றுள்தனேத் தமியனிருகண்கள்குளிரத், தரிசிக்கலேமனது வுருகுதேயிரவுபகல்சற்றும்யான்கண்டுகொண்டால், ஒருநாளுமெமபயம் வருகாதேமண்ணுமுத லுற்றமூவாசைபறுமே, வுறியவொரு தாய்வயிரில் மருவுமொரு கருவாகி வுற்பவமுமின்னமுண்டோ, அரவினேப்பணியென்ன வுரமீதணிந்து கொண்டாடும் நற்பரமனருளும், மையனேயீராறுகையனே யெனக்கினியவருள்

தருகும் நின்னடிமையான், திரமுடன்காணநல் வரம மதைத்தருகுவாய் சிவகுருவதானபரனே, செங்கண் மால்மருகனே துங்கவேல்முருகனே தென்பழனிவடி வேலனே. 7

எத்தனைவிதத்தில்நற் புத்திகளனேகமா யினிதா பெடுத்துரைத்து, மென்னுடையபாழ்மனது பின்னு முலகாசைகொண் டேகுமேசற்றுகிலும்,பத்திசெய்து னதடியை நித்தமுந்துதியாத பாவியானிருந்துமிந்தப் பாரினிற்சமனொத்தநாரியர்கள் காமவெம்பரவை தனி ல்வீழ்ந்தழியவோ, இத்தனைகடுஞ்சூதுவைத்திருந்தா லினிமேலெவ்விதத்துணைநம்புவேன்,ஏழைமுகமதை யிந்தவேளைபார் யான்செய்தயிருவினை தவிர்க்க வுந்த ன், சித்தமதிலன்புமிகவைத்தருள் செய்கைவளர் சிவ குருவ தானபரனே, செங்கண்மால்மருகனே துங்க வேல்முருகனே தென்பழனிவடிவேலனே. 8

வையகப்புகழு முருகையனே நின்கோவில் வலம் வராக்காலிருந்தென், வடிவேலெனத்தினம் படிபாதி ருக்கின்ற வாயதுமிருந்துமென்ன, மெய்பனே பழனி வேலையனிற்காணாத விழியது மிருந்துமென்ன, வேத முறுமெஞ்ஞான போதங்கேளாதசெவிவீணினி லிரு

ந்துமென்ன, வையநின்னடிமீது பையவே சேவியாவ ங்கைக ளிருந்துமென்ன, வண்டர்தொழு நின்திருத் தொண்டு செய்துய்யாத வாக்கைதானிருந்துமென்ன, செய்யவடிவேல் கொண்டவையனே வறிவிலாச்சிறிய னேற் கருள்புரிகுவாய், செங்கண்மால் மருகனே துங் கவேல்முருகனே தென்பழனிவடிவேலனே. 9

எத்தனை தலங்கள்போய்ச் சுற்றினும் பேரின்பமெ ய்துமேவேழையேற்கே, யெழிலானமுகின் மழைபொ ழியவுயர்தெங்குபனை யினியபலாமாவரம்பை, யித்தி நாவற்கமுகு சுற்றிலின்னந்தருவி லிங்கவுங் குமுதபல ரோ, டெங்கும்விகசிக்கின்றபங்கயப்பொய்கையொடு மிணையில்பலனங்கள்சூழுங், எத்திசைகளும்புகழவுற் ற நற்றிருவா ருனங்கொடி தனக்குநிகரா, யிருக்கு மோவறுத்தமீன் பொருத்தியயிராகுமற் றின்னமும னேகமுண்டென், சித்தமதுதெளியமனம் வைத்தரு ளவேண்டுநற்சிவகுருவதானமரனே, செங்கண்மால்ம ருகனே துங்கவேல்முருகனே தென்பழனி வடிவேல வனே. 10

வடிவேலர்பேரில் பதிகமுற்றிற்று.